" மிக அவசரம் / தனிக்கவனம்

அனுப்புநர்

திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்-9.

பெறுநர்

மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்/
மாவட்ட கல்வி அலுவலர்கள்,
வேலூர் மாவட்டம்.

ந.க.எண். 58/செமதொ/2018, நாள்: .06.2018

அய்யா,

பொருள்: தமிழரசு சந்தா - தமிழரசு (தமிழ் மற்றும் ஆங்கிலம் ) இதழ் சந்தாதாரர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ள கோருதல்- தொடர்பாக.

பார்வை: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடித எண்.283/ச1/தஅ/2018, நாள்: 04.04.2018.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிகழ்ச்சிகள், அரசின் அறிவிப்புகள், நலத்திட்டங்கள், சாதனைகள், அரசின் திட்டங்களால் பயன்பெறும் பயனாளிகளின் வெற்றிக் கதைகள், கட்டுரைகள் மற்றும் அரிய தகவல்களை உள்ளடக்கி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழரசு இதழ் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. தற்போது புதிய நவீன இயந்திரத்தில் பல வண்ணத்தில் தமிழரசு இதழ் அச்சிடப்பட்டு அனுப்பப்பட்டு வருகிறது. தமிழரசு இதழுக்கான சந்தாதாரர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது மிகவும் அவசியம் எனவும், தமிழரசு இதழ்கள் ஒரு லட்சம் பிரதிகள் மாதந்தோறும் அச்சடிக்க ஏதுவாக சந்தாதாரர்களை அதிக எண்ணிக்கையில் சேர்க்க அரசு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி தமிழரசு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) இதழ்களுக்கு சந்தாதாரர்கள் அதிக எண்ணிகையில் சேர்க்கும் பொருட்டு ஏப்ரல்' 2018 முதல் மார்ச்' 2019 வரை ஆண்டு மற்றும் ஆயுள் சந்தா சேர்க்க இம்மாவட்டத்திற்கு கீழ்க்கண்டுள்ளவாறு குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | இலக்கு (Target) |
|---|---|
| தமிழ் ஆண்டு சந்தா | 4,000 |
| தமிழ் ஆயுள் சந்தா | 500 |
| ஆங்கிலம் ஆண்டு சந்தா | 75 |
| ஆங்கிலம் ஆயுள் சந்தா | 50 |
| மொத்த சந்தா | 4,625 |

**தமிழரசு சந்தா தொகை விவரம்:**

அ) தமிழரசு தமிழ் இதழ் — ஆண்டு சந்தா : ரூ. 240/-

ஆ) தமிழரசு தமிழ் இதழ் — ஆயுள் சந்தா : ரூ. 2000/-

இ) தமிழரசு ஆங்கில இதழ் — ஆண்டு சந்தா : ரூ. 240/-

ஈ) தமிழரசு ஆங்கில இதழ் — ஆயுள் சந்தா : ரூ. 2400/-

..2..

Scanned by CamScanner

எனவே தங்கள் துறையின் மூலம் தமிழரசு தமிழ் இதழுக்கான ஆண்டு சந்தா (500) மற்றும் ஆயுள் (50) சந்தா மற்றும் ஆங்கிலம் இதழ் ஆண்டு சந்தா (100) ஆயுள் சந்தா (25) சேகரித்து தொகையினை **"The Deputy Director (Publications) Tamil Arasu, Chennai-2** என்ற பெயருக்கு வங்கி வரைவோலையாகவோ அல்லது தொகையாகவோ பெற்று சந்தாதாரர்களின் முழு முகவரி (பின்கோட்டுடன்) சந்தாதாரரின் கைப்பேசி எண்ணுடன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9 அவர்களுக்கு அனுப்பி வைத்திட அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

7/6/18

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்-9.

7/6/18

9/11

நடுநிலைப் பள்ளிகள்.

உயர்நிலைப் பள்ளிகள்.

மேல்நிலைப் பள்ளிகள்.

மெட்ரிக் பள்ளிகள்.

Scanned by CamScanner